# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

முறையீட்டு மனு எண்: 209/மா/2018
ஆணை நாள்: 26.8.2019

திரு. கே. வரதராஜன்,
திருநெல்வேலி. – **முறையீட்டு மனுதாரர்**

மாநகராட்சி ஆணையர்
தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி. – **எதிர்மனுதாரர்**

திருநெல்வேலி மாநகராட்சி, ஸ்ரீபுரம், வடக்கு சிவசக்தி சாலை, கே. ஜி. மருத்துவமனை வளாகம், எண். 33-சி, என்ற முகவரியில் வசிக்கும் திரு. கே. வரதராஜன் என்பவரது 1.10.2018 நாளிட்ட முறையீட்டு மனு 11.10.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு, முறையீட்டு மனு எண்.209/2018 என எண்ணிடப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அறிக்கைகள் பெறப்பட்டு, கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

முறையீட்டு மனுதாரர் திரு. கே. வரதராஜன் என்பவரது 1.10.2018 நாளிட்ட முறையீட்டு மனுவில், தான் புதுக்கோட்டை நகராட்சியில் கணக்கர் நிலை 2 ஆக பணிபுரிந்து 30.04.2006 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளதாகவும், முந்தைய தூத்துக்குடி நகராட்சியில் 17.3.1988 முதல் 17.04.1989 வரையிலும் மற்றும் 10.7.1989 முதல் 05.06.1997 வரையிலும் உதவியாளராக பணிபுரிந்த காலத்தில் தனக்கு வழங்கப்படவேண்டிய 5வது ஊதியக்குழு நிலுவைத் தொகை வட்டியுடன், சேமநல நிதி தொகை வட்டியும், சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை வட்டியுடன் மற்றும்

அகவிலைப்படி நிலுவைத் தொகை ஆகியவைகள் வழங்கப்படாமல் இருந்து வருவதாகவும் அதனை வழங்க தூத்துக்குடி மாநகராட்சி ஆணையிருக்கு ஆணையிடுமாறு கோரியுள்ளார்.

முறையீட்டு மனுதாரர் 04.12.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் தூத்துக்குடி நகராட்சியாக இருந்தபோது அந்நகராட்சியில் உதவியாளராக பணிபுரிந்ததாகவும், பின்னர் புதுக்கோட்டை நகராட்சியில் கணக்கர் நிலை 2 பதவியில் பணிபுரிந்து 30.04.2006 அன்று பணி ஓய்வு பெற்றதாகவும், தனியருக்கு வழங்கப்பட வேண்டிய 5வது ஊதியக்குழு நிலுவைத் தொகை, சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை மற்றும் அதற்குரிய வட்டித்தொகை, சேமநலநிதித் தொகைக்குரிய வட்டித் தொகை மற்றும் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள அகவிலைப்படி ஆகியவைகள் வழங்கப்படாமல் இருந்து வருவதாக தெரிவித்தார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 15.10.2018 நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரரின் மனு மீதான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து 17.12.2018 நாளிட்ட ஆணையில் மனுதாரருக்குரிய நிலுவைத் தொகையினை உடன் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தியும், 11.3.2019 நாளிட்ட ஆணையில் அதன் விபரத்தை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவிக்கவும் ஆணையிடப்பட்டது.

தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் 5.7.2019 நாளிட்ட அறிக்கையில் முறையீட்டு மனுதாரருக்கு தனியர் பணியாற்றிய காலத்தில் அரசால் அவ்வப்போது அறிவிக்கப்பட்ட அகவிலைப்படி இதர பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட அதே நாட்களில் நிலுவையின்றி வழங்கப்பட்டுள்ளது என்றும், சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ.2,960/- அதற்கான வட்டி ரூ.9,982/- மற்றும் மாநகராட்சியின் பங்குத் தொகை ரூ.10,000/- ஆக மொத்தம் ரூ.22,492/- காசோலை மூலம் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து காசோலை நகலினையும் இணைத்துள்ளார். மேலும் தனியருக்கு அம்மாநகராட்சியால் வழங்கப்படவேண்டிய நிலுவைத்தொகை ஏதும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, வாக்குமூலம் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஏற்கப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் இவ்வழக்கினை முடித்து வைக்கலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 26–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//—

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர் (பொ).

பெறுநர்

1. திரு. கே. வரதராஜன்,
33–சி, கே.ஜி.மருத்துவமனை வளாகம்,
வடக்கு சிவசக்தி சாலை, ஸ்ரீபுரம்,
திருநெல்வேலி 627 001.

2. ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி.

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரிகள்